திட்டத்திற்கும் தனித்தனியாக அத்திட்டப் பணிக்காகவே தற்காலிகமாக அமர்த்தப்படுகின்றனர். குறிப்பிட்ட திட்டம் முடிவடைந்ததும், இத்திட்டத்தில் பணியாற்றும் மேற்பார்வையாளரை பணி நீக்கம் செய்ய நேரிடுகிறது. ஆகையால் இதில் பணி மூப்பு பற்றிய பிரச்சினைக்கு இடமில்லை.

(இ) விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழக உதவியுடன் புதிய திட்டங்கள் துவக்கப்படும்போது அதில் உண்டாகும் வேலை வாய்ப்புகளில், பணிநீக்கம் செய்யப்பட்டுள்ள தொழில் நுட்ப மேற்பார்வையாளர்களுக்கு தமிழ்நாடு மாநில நிலவள வங்கி முன்னுரிமை அளிக்கிறது.

உதகமண்டலம் கூட்டுறவு சிறப்பங்காடி.

*வினா 44.—திரு. கே. உச்சி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகமண்டலம் கூட்டுறவு சிறப்பங்காடி நஷ்டத்தில் நடந்து கொண்டிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த நஷ்டம் எவ்வளவு?

(இ) அதன்மீது எடுக்கப்பட்ட மேல் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) ஆம்.

(ஆ) (31-12-78 அரையாண்டு முடிந்த அறிக்கையின்படி ரூ. 8,07,357.37.

(இ) நிர்வாகக் குழு கலைக்கப்பட்டு தனி அலுவலர் நியமிக்கப்பட்டும் பழைய, மற்றும் கெட்டுப்போன சரக்குகளை விற்று முடங்கிக் கிடக்கும் மூலதனத்தை திரும்பிப் பெறவும், சரக்கு இருப்புக் குறைவுத் தொகையை வசூலிக்க சம்பந்தப் பட்டவர்கள் மீது தாவா தொடரப்பட்டும், பெற்ற தீர்ப்புகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டும் நட்டத்தில் இயங்கும் கிளைகளை மூடிவிடவும், புனருத்தாரணத் திட்டத்தின் கீழ் மாநில, மத்திய அரசுகளிடமிருந்து கடன் உதவி பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே, அங்கே வியாபாரத்தில் ஏற்படும் நட்டத்திற்கு அங்கே உள்ள நிர்வாகிகளும் ஊழியர்களும் பொறுப்பு என்று சொல்லப்படுகிறதே, அதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, அவைகளை எல்லாம் ஆராய்வதற்காகத்தான் தனி அலுவலர் நியமிக்கப்பட்டு 8 முனைகளிலே அந்தக் குறைபாடுகளைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

1979 அக்டோபர் 31]

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : தலைவர் அவர்களே, எந்த எந்த கூட்டுறவுச் சிறப்பு அங்காடிகள் லாபத்தில் இயங்கி வருகின்றன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : அதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்க லாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது உதகமண்டலத்தினை யொட்டிய கேள்வி. நீங்கள் ஒட்டுமொத்தமாகக் கேட்டால் அமைச்சரிடம் பதில் எப்படி இருக்கும்?

திரு. என். பழனிவேல் : பொதுவாக கூட்டுறவு சிறப்பு அங்காடிகளில் பொருட்களின் விலை மற்ற வெளி மார்க்கட்டிலே விற்பனைதப்போல் தான் இருக்கிறது. இப்படியிருந்தும் அங்கே 8 இலட்சத்து 7 ஆயிரம் ரூபாய்க்கு மேல் நட்டம் ஏற்பட்டிருக் கிறது. அது மட்டுமல்ல, அங்கே பணியாற்றுகின்றவர்களுக்கு கம்மியாக சம்பளம் கொடுக்கப்படுகிறது. இப்படி இருந்தும் ஏன் நட்டம் வந்தது என்பதைப்பற்றி ஆராயத்தான் தனி அதிகாரி நியமிக்கப்பட்டார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மூலவினாவிற்கு நான் பதில் சொல்கிறபோதே 8 விதமான முனைகளிலே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்திருக்கிறேன். அந்த விவரங்களை இந்த மா மன்றத்திலே எடுத்து வைத்திருக்கிறேன் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. கே. உச்சி, : கூட்டுறவு நிறுவனங்களுக்கு மத்திய வங்கி போன்ற வங்கிகளிடமிருந்து எந்த அளவிற்குக் கடன் வழங்கப் பட்டிருக்கிறது என்பதைச் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர் களே, தாங்கள் ஏற்கனவே குறிப்பிட்டபடி இது உதகமண்டலம் கூட்டுறவு சிறப்பு அங்காடியைப் பற்றியது. மேற்கொண்டு விவரங்கள் தேவைப்பட்டால் தனிக் கேள்வியைப் போட்டால் அதற்கான விவரங்களை அளிக்கலாம்.

திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, தனி அலுவலர் போட்டு 10 மாதங்கள் ஆகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் யாவை என்று சொல்லமுடியுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போடவேண்டும். அந்த முயற்சிகள் சீராக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதை மட்டும் இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் நெல் கொள்முதல் விலை.

*வினா 45—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) தஞ்சை மாவட்டத்தில், நெல் கொள்முதலில் நிர்ணயிக்கப்பட்ட விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : 1979 சம்பா அறுவடையின் போது தஞ்சை மாவட்டத்தில் நெல்லின் விலைகள் பொதுவாக, மத்திய அரசு நிர்ணயித்திருந்த கொள்முதல் விலைகளுக்கு மேலாகவே நிலவிவந்தன. அங்குமிங்கும் சில பகுதிகளில் விலைகள் குறைந்தபோது, விவசாயிகளுக்கு ஆதரவு அளிக்கும் வகையில், இந்திய உணவுக் கழகத்தினாலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினாலும் தேவையான நேரடிக் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு விவசாயிகள் முன்வந்து அளித்த நெல் வாங்கப்பட்டது.

[முற்பகல் 9-10]

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத் துறையில் சென்ற ஆண்டு நெல் வாங்குவதை நிறுத்திய பிறகு ஓரளவுக்கு விலை ஏறியது. ஆனால், இந்த ஆண்டு, இப்பொழுது அரசிலே விலையைக் கூட்டிக் கொடுப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால், தஞ்சையில் 1975–76 இல் ஒரு குவிண்டாலுக்கு 105 ரூபாய் சன்ன ரகத்திற்கு வாங்கப்பட்டது. ஆனால், இன்றைக்கு விலை அதிகம் ஆகிய பிறகு 109 ரூபாய் என்று அரசு அறிவித்து இருக்கிறது. 1975-76-இல் 105 ரூபாய் விற்றது, பிறகு ஜனதா ஆட்சியில் 8 ரூபாயும், சரண்சிங் ஆட்சியில் 10 ரூபாயும் ஏற்றி ஆகமொத்தம் 18 ரூபாய் ஏற்றியிருக்கிறது. 1975–76-க்குப் பிறகு 20 ரூபாய் என்று சொல்வதால் வேறுபாடு 5 ரூபாய் என்று இருக்கும்பொழுது 23 ரூபாய் குவிண்டாலுக்கு அதிகமாக ஏற்றியிருக்க வேண்டும். 23 ரூபாயும் 105 ரூபாயும் சேர்ந்து 128 ரூபாய் கொடுத்துக்கொண்டிருக்க வேண்டும், ஆக்கவலாக. ஆனால்....